மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

"al-Abyaath al-Muqaddasa": A Study

Dr. K.M.A. Ahamed Zubair

Assistant Professor (SG) of Arabic, Post Graduate and Research Department of Arabic, The New College, Chennai.

Manuscript ID : **MT19A0015**

Volume : **1**

Issue : **2**

Month : **December**

Year : **2021**

Received: 04.12.2021

Revised: 06.12.2021

Accepted: 08.12.2021

Published: 17.12.2021

Pages : 17-22

ABSTRACT:

The Tamil classic, Thirukkural is translated into many major languages of the world. In Arabic Professor Mohammed Yousuf Kokan has translated in the year 1980 as "al-Abyaath al-Muqaddasa". By realizing the Valluvar's thoughts and ideas, Kokan attempts to translate Thirukkural into Arabic with utmost meaning. The purpose of this article is to analyse the translation techniques and strategies of Professor Kokan employed in the work "al-Abyaath al-Muqaddasa".

KEYWORDS:

Thirukkural, Tamil, ArabIc, Translation, Kokan.

REFERENCES :

1. KP Aravanan, Thirukkural, TamilKottam, First Edition 2007, Chennai.
2. Sami Chidambaram, Thirukkural- Text and Meaning, Star Publisher, Fifth Edition 1983, Chennai.
3. Kokan, Mohammad Yousuf, Al- Abtath al-Muqaddassa, Hafiza Publication, First Edition 1980, Chennai.
4. Ahamed Zubair, K M A. "Translating Thirukkural into Arabic". Tisai Ettum Literary Quarterly for Translation, vol. 3, no. 3, 2014, pp:13-28.

"அல்-அப்யாத் அல்-முகத்தஸா" : ஒரு பார்வை

முனைவர் க.மு.அ. அஹ்மது ஜுபைர்,
உதவிப் பேராசிரியர்,
அரபித்துறை, புதுக்கல்லூரி, சென்னை, இந்தியா.

கட்டுரைச் சுருக்கம்

அரபி மொழியில் பேராசிரியர் முஹம்மது யூசுஃப் கோகன், திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார். வள்ளுவரின் சிந்தனைகளை, குறட் கருத்துக்களை உணர்ந்து, அரபி மொழியின் சொல்லாடல்களில் மொழி பெயர்க்க முனைந்துள்ளார். அம்மொழிபெயர்ப்பு உத்திகளை ஆராய்வதும், அவற்றைப் பதிவு செய்வதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருச்சொற்கள்

திருக்குறள், தமிழ், அரபி, மொழிபெயர்ப்பு, கோகன்.

முன்னுரை

பல உலக மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அரபி, பர்மியம், சீனம், டச்சு, ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலி, ஜப்பானீஸ், கொரியன், இலத்தீன், மலாய், போலிஷ், ரஷ்ய, ஸ்பானிஷ், சிங்களம் ஆகிய உலக மொழிகளில் மொழியாக்கம் கண்டுள்ளது.

வள்ளுவத்தில் உலகு தழுவிய பார்வை உள்ளதென்பதை யாவரும் அறிவோம். தமிழில் வள்ளுவம் முகிழ்ந்த காலத்திலிருந்து இன்றுவரை உரை, விளக்கம், ஆய்வு, ஒப்பாய்வு, மொழிபெயர்ப்பு எனப் பன்முக நிலைகளில் அதன் உலகு தழுவிய பார்வை மிகப் பரவலாகவும், மிக ஆழமாகவும் ஆராயப்பட்டுள்ளது.

மொழிபெயர்ப்பாளர்- பேராசிரியர் முகம்மது யூசுஃப் கோகன்

கி.பி. 1916ம் ஆண்டு முஹம்மது முகம்மது யூசுஃப் கோகன், இப்ரஹீம் கோகனின் மகனாக மீனாம்பூர் என்ற ஊரில் பிறந்தார். இவ்வூர் செஞ்சிக் கோட்டையில் இருந்து மூன்று கி.மி. தொலைவில் அமைந்துள்ளது. 1948ம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் அரபி மொழியில் முதுநிலைப் பட்டமும், 1965ம் ஆண்டு இளம் முனைவர் ஆய்வுப் பட்டமும்(எம்.லிட்) பெற்றார். அரபி, உர்தூ, பாரசீகம் மற்றும் இஸ்லாமிய வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியராக மூன்றாண்டுகள் சென்னை அரசு முகம்மதன் கல்லூரியில் பணியமர்த்தப்பட்டார். 1949ம் ஆண்டு, ஆகஸ்டு 5ம் தேதி சென்னைப்

பல்கலைக் கழகத்தில் அரபி, உர்தூ, பாரசீகத் துறையில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1977ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றார்.

பேராசிரியர் முஹம்மது யூசுஃப் கோகன், திருக்குறளை அரபி மொழியில் மொழிபெயர்த்து, 'அல்-அப்யாத் அல்-முகத்தஸா' என்ற பெயரில், 1980ம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இந்நூல் 'தாருல் ஹாபிஜா' அச்சகத்தால் அச்சிடப்பட்டுள்ளது. சென்னை, இராயப்பேட்டை மயிலாப்பூரான் தெருவில் இவ்வச்சகம் அமைந்துள்ளது.

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என பாரதி கூறினான். அதே போல், நமது இலக்கியங்களும் உலக மொழிகளில், குறிப்பாக உலக செம்மொழிகளில் மொழிபெயர்த்தல் வேண்டும். சிரமேற்கொண்டு பேரா. கோகன் திருக்குறளை செமிடிக் செம்மொழியாம் அரபியில் மொழிபெயர்த்துள்ளார். அரபி மொழியில் ஆற்றிய சேவையைக் கருதி, குடியரசுத் தலைவரின் செம்மொழி வளர்ச்சி விருது பெற்றவர் பேரா.கோகன் ஆவார். தமிழ் நாட்டிலிருந்து இத்தகுதியைப் பெற்ற முதல் நபரும் இவராவார்.

"அல்-அப்யாத் அல்-முகத்தஸா" - ஒரு பார்வை

மூலமொழிச் சொல்லையும் கருத்தையும் புலப்படுத்தப் பெறுமொழியில் தேர்ந்தெடுக்கப்படும் சொல் அல்லது தொடர், நிகரன் எனப்படும். "அல்-அய்யாத் அல்-முகத்தஸா" என்ற திருக்குறள் அரபி மொழிபெயர்ப்பில் நாம் பின் வரும் நிகரன்களைக் கண்ணுறலாம். அவை சொல்லாக அல்லது தொடர் நிகரன்களாக விளங்குகின்றன.

1. "வான் சிறப்பு" என்ற சொல்லிற்கு மழையினது சிறப்பு பற்றிக் கூறுதல் என்று பொருள்படும். 'வான்' என்ற சொல்லிற்கு "ஸமாஉ" என்றும் 'மழை' என்ற சொல்லிற்கு "மத்தர்" என்ற சொல்லும் அரபியிலே நிலவி வரும் வேளையில், மொழிபெயர்ப்பாளர் 'மத்தர்' என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளார்.
2. "இறைநலம்" என்ற சொல்லிற்கு "அத்தஹ்மீத் வத்தம்ஜீத்" என அரபியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இஸ்லாத்திற்கே யுரிய சொல்லாட்சிகள் இவரது மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளன. "அத்தஹ்மீத்" என்பது "அல்ஹம்து லில்லாஹ்" அதாவது "அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே" என்பது பொருள். "தம்ஜீத்" என்றால் 'இறைவனை அதிகமாகப் புகழ்தல்' என்று பொருள். ஆக, இது போன்ற நிகரன்கள் சில இடங்களில் மிகையாகப் பெய்யப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.
3. "ஆதிபகவன்" என்ற சொல்லை மக்களுக்கெல்லாம் முதல்வன், முதன்மைப் பகுதி என்ற பொருளில் வள்ளுவர் தனது குறளில் யாத்துள்ளார். மொழிபெயர்ப்பாளர் "ஆதிபகவன்" என்ற சொல்லை "அவ்வலுல் காஇனாத்" எனக் கூறுகிறார். "காஇனாத்" என்றால் உலகம், "அவ்வல்" என்றால் முதன்மையான, முதலாவதாக

எனப் பொருள். ஆக ஆதிபகவன் என்ற சொல்லை "முதன்மையான உலகம், அண்டம், படைப்பினம்" என்ற பொருளில் அரபியில் கையாண்டுள்ளார்.

4. "இல்லறவியல்" என்ற இயல், அரபியில் "அல்-உஸ்ரா வ அஃமாலுஹா அல்-சாலிஹா" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "குடும்பமும் அதன் நற்செயல்களும்" எனப் பொருள்படும். மேலும் "இல்வாழ்க்கை" என்பது "குடும்ப வாழ்க்கை" என அரபியில் கூறப்பட்டுள்ளது. "இல்" என்பது மனைவி என்ற பொருளைக் குறித்தாலும், "இன்பத்துபால்" என்ற தனிப்பிரிவு பெண்களைப் பொதுவாகவும், தலைவியைக் குறிப்பாகவும் உரைப்பதால், மொழி பெயர்ப்பாளர் இல்லறவியலை குடும்பவியலாகக் குறிப்பிடுகிறார் போலும்.
5. "செய்ந்நன்றி அறிதல்" என்றால் பிறர் செய்த நன்மையை மறவாமை எனப் பொருள். இதற்கு அரபியில் "இஹ்ஸான்" என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் நன்மை பயத்தல், அனுகூலம் செய்தல், தருமம், ஈகை, கருணை, கொடை, நற்செயல்கள் புரிதல். ஆக அரபி மொழியின் ஆழமான சொற் செறிவு இந்த "இஹ்ஸான்" எனும் சொல்லிற்கு அமைந்துள்ளதை இயம்புகிறது.
6. "நாவினால் சுட்டவடு" என்பது "இஹ்திராக் பில்லிஸான் அல் - முர்ரு" என அரபியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இஹ்திராக் என்றால் சுடுவது எனப் பொருள்படும். அல்லிஸான் அல்-முர்ரு என்றால் இனிமையற்ற கடுஞ்சொல் எனப் பொருள். "வடு" என்ற பொருள் அரபியில் உரைக்கப்படவில்லை.
7. "அறிவுடைமை" என்பது "ஆக்கப்பூர்வமாக அறிதல்" என்பதாக அரபியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதாவது, "அல்-ஃபஹ்மு அல்-சலீம்" என்பதாக. அறிவுடையார் என்பதை 'முழுமையான ஆக்கப்பூர்வமான அறிவு பெற்றோர்' எனப் பொருள்படும் "அஸ்ஹாபுல் ஃபஹ்மி அல்-சலீம்" என்ற அரபிச் சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளது.
8. தினை மற்றும் பனை என்ற சொற்கள், சிறிய துகள், பேரீத்தம் பழம் எனப் பொருள்படும் "தர்ரா", "நக்ஹ்ல்" ஆகிய அரபிச் சொற்களாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பனைமரம் பற்றி அரேபியர்கள் அறியமாட்டார்கள் என்பதற்காக மொழி பெயர்ப்பாளர் இவ்வுக்தியைக் கையாண்டிருக்கலாம்.
9. "பெரியாரைத் துணைகோடல்" என்பது "நற்செயல்கள் புரிவாரோடு நெருக்கமாயிருப்பது" எனப் பொருள்படும். "அல் சுஹ்பா அல்-சாலீஹா" என்பதாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
10. "கீழ் மக்களோடு பெரியார் சேரார்" என்பதை சிற்றினஞ் சேராமை என வள்ளுவர் உரைக்கிறார். அரபியில் "அல் இஜ்தினாப் அன் சுஹ்பத்தில் லுவ்வாம்" என மொழிபெயர்ப்பாளர் கூறுகிறார். "பழி சொல்லப்பட்டோருடன் உறவு கொள்ளாமை" என்பதாக தமிழில் பொருள்படும்.

11. “கூடா நட்பு” என்பதை “பொய்யான நட்பு” எனப் பொருள்படும் “அல்-சதாகா அல்-காதிபா” என்ற சொல்லில் மொழி பெயர்ப்பாளர் குறிப்பிடுகிறார்.
12. “களவியல்” என்பதை “காதலும் அதன் வலியும்” எனப் பொருள்படும் “அல்_ஹுப்பு வ ஆலாமுஹு” என்பதாக மொழி பெயர்ப்பாளர் குறிப்பிடுகிறார்.
13. “கற்பியல்” என்பதை “எல்லோரிடமும் விளங்கவேண்டிய காதலொழுக்கம்” எனப் பொருள்படும் “அல்_ஹுப்பு பிர்ரிவாஜி” என்பதாக மொழிபெயர்ப்பாளர் குறிப்பிடுகிறார்.
14. “படர் மெலிந்திரங்கல்” என்றால் பிரிவால் தலைமகள் மெலிந்து இரங்குதல் எனப் பொருள்படும். ஆனால் அரபியில் “தலைமகள் தனிமையில் கதறுதல்” எனப் பொருள்படும் “சுராக்ஹா அல்-மஹ்பூபா அல்-மஹ்ஜூரா” என்பதாக மொழி பெயர்ப்பாளர் கூறுகிறார்.
15. “கனவு நிலையுரைத்தல்” என்பதை “காதலின் பொறுமைகள்” என்ற பொருளில் “அஹ்லாம் அல்-ஹுப்பு” என மொழி பெயர்ப்பாளர் கூறுகிறார்.
16. நாம் மேலே சொற்கள் மற்றும் தொடர்கள் எவ்வாறு நிகரன்களாக உரைக்கப்பட்டுள்ளன என்பதைக் கண்ணுற்றோம். சில குறள்கள் மூலப்பொருளாக உரைக்கப்பட்ட அதன் பொருண்மைகளில் மொழிபெயர்க்கப்படாமல் அதன் தழுவல்களாக, நிகரன்களாக எவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பதைப் பின்வரும் குறள்களின் மூலம் காணலாம்.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு

நல்லொழுக்கத்தில் நின்று தீய ஒழுக்கங்களைத் துறந்தாரது பெருமையே எல்லாப் பெருமைகளிலும் மேலான பெருமையாகும்; மேலான பெருமையெனக் கொள்வர்.

மொழிபெயர்ப்பாளர், இக்குறளை அரபியில் கூறும்போது, ‘எல்லாப் பெருமைகளிலும் மேலானவர்’ என்பதற்கு பதிலாக, “கடமை மற்றும் உண்மையை என்றும் நிலைநாட்டுபவர்” என்பதாக அரபியில் குறிப்பிடுகின்றார். “யஸீரு தாயிமன் ஃபீஸபிலில் ஹக் வஸ் ஸித்கி” என அரபியில் உரைக்கப்பட்டுள்ளது.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்

தந்தை மகனுக்குச் செய்யும் உதவியானது அவனைப் பெரியோர் அவையில் தலைவனாக வீற்றிருக்கச் செய்வதே.

மொழிபெயர்ப்பாளர் இக்குறளை அரபியில் கூறும்போது, தந்தை மகனுக்கு ஆற்றும் சிறந்த செயலானது, அவனைப் பெரிய பதவியில் மக்கட்கு மத்தியிலே வீற்றிருக்கச்

செய்வதே என்பதாகக் கூறுகிறார். "ஷாகிலன் லில் மன்ஸப் அல்-ர:பீ: பைனன்னாஸ்" எனக் கூறப்பட்டுள்ளது.

அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு

அன்பில்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரியவராக்குவார். அன்புடையார் அப்பொருள்களேயன்றி உடம்பினையும் பிறருக்கு உரியவராக உடையர்.

மொழிபெயர்ப்பாளர் இக்குறளை அரபியில் கூறும்போது, அன்பில்லாத ஒருவன் தனக்காகவே இறப்பான். எவனொருவனின் உள்ளம் அன்பினால் நிரம்பியுள்ளதோ அவன் பிறருக்காக இறப்பான் என்பதாகக் கூறுகிறார். "அர்ரஜுலு அல்லதீ யக்லூ மின் அல் முஹப்பா யமூத்து லிந:ப்ஸிஹி :பகத், வல்லதீ கல்பஹு மம்லூஉன் பில் முஹப்பா யமூத்து லிகைரிஹி மினன் னாஸ்" என அரபியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

யாதொரு பொருளை யார் யார் சொல்லக் கேட்பினும் அப்பொருளின் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவாகும்.

மொழிபெயர்ப்பாளர் இக்குறளை அரபியில் கூறும்போது, ஒருவன் சொல்லும் வார்த்தைகளில் வெளிப்படும் உண்மை மற்றும் பொய் இவ்விரண்டையும் வேறுபடுத்தித் தெளிவதே முழுமையான அறிவாகும், "அல்-:பஹ்ம் அல்- சலீம் ஹுவல்லதீ யுமய்யிஜு பைனல் ஹக் வல்-பாதில் மினல் கலிமாதீ அல்லதீ யத:பவ்வஹு பிஹா அஹது" என அரபியில் மொழிபெயர்த்துள்ளார்.

சில குறள்களின் மொழிபெயர்ப்பு, மூலத்தைவிட, மூல ஆசிரியரை விடச் சிறந்த விதத்தில் பொருண்மையை உரைப்பதாகவும் அமைந்துள்ளது. அவற்றில் ஒன்று பார்ப்போம்.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

தக்க காலத்தில் செய்த உதவி சிறிதாயிருப்பினும் பயனை நோக்க உலகத்தை விட மிகப் பெரியதாகும். "தக்க காலத்தில் செய்த நற்செயலானது சிறிதாயிருப்பினும் உலகத்தை விட, உலகப் பொருள்களை விட மேலானதாகும்" என மொழிபெயர்ப்பாளர் பதிவு செய்துள்ளார். "அல்-இஹ்ஸானு :பீ வக்திஹி முஹிம்மன் கான சகீரன் ய:பூகு குல்லு ஷைகின் :பில் ஆலம்" என அரபியில் கூறப்பட்டுள்ளது.

முடிவுரை

ஆக மேற்கூறிய மொழிபெயர்ப்பில், மொழிபெயர்ப்பாளர் மூல நூலுடனும், மூல நூல் சார்ந்த பண்பாட்டுடனும் நெருங்க முயன்றுள்ள பான்மையைப் புலப்படுத்துகிறது. கோகன், வாசகரை நெருங்கும் நோக்கில் சில மொழிபெயர்ப்பு உத்திகளைக் கையாண்டுள்ளார் அரபி மொழியில், மொழிபெயர்ப்பே இல்லாத குறையை, கோகனின் "அல்-அப்யாத் அல்-முகத்தஸா" என்ற படைப்பு நிறைவு செய்துள்ளது. இதன் மூலம் திருக்குறள் அரபுலகை அடைந்துள்ளது.

துணைநூற்பட்டியல்

1. திருக்குறள், க ப அறவாணன், தமிழ் கோட்டம்,முதல் பதிப்பு 2007, சென்னை.
2. திருக்குறள்: பொருள் விளக்கம்-பதவுரையும் கருத்துரையும், சாமி சிதம்பரனார்,ஸ்டார் பிரசுரம் 1983,சென்னை.
3. Kokan, Mohammad Yousuf, Al- Abtath al-Muqaddassa ,Hafiza Publication, First Edition 1980, Chennai.
4. Ahamed Zubair, K M A."Translating Thirukkural into Arabic".Tisai Ettum Literary Quarterly for Translation,vol. 3, no. 3, 2014, pp:13-28.